# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

உ புஸ்த. சஞ்சிகை. ௰௮ ] ௲௮௱௪௰௨ ௵, புரட்டாதி. ௰௫, தேயதி வியாழக்கிழமை, Thursday, Sept. 15, 1842. [Vol. II No. 18


## பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு.

(Historical sketch of the Pandian kingdom )

(Continued from page 201 )

வீரப்பநாயகன் தன் தகப்பனுக்குப் பிரதியானான். ஒரு சாதனத்திலே திரிசிராப்பள்ளியானது முன்னாடித் தஞ்சாவூர்ச் சமஸ்தானத்திலே சேர்ந்திருந்ததாகவும், அதற்கீடாக வல்லம் கோட்டையைத் தஞ்சாவூர்ச் சமஸ்தானத்துக்குப் பரிவர்த்தனங்கொடுத்துத் திரிசிராப்பள்ளி முதலிலே மதுரையிற் சேர்த்துக்கொள்ளப்பட்டது இவனுடைய துரைத்தனத்திலே தானென்றுஞ் சொல்லுகின்றது. இந்தச் செய்கை இப்படியே அபிஷேகபாண்டியமாய்ச் சொல்லப்படுகின்றது. ஆனாலும் வேறே சாதனங்களிலே இந்தக் காரியம் நடந்தது முன்னமே சொல்லியிருக்கிற முதல் நாயகனாகிய விசுவநாதநாயகன் துரைத்தனத்திலேயோ வீரப்பநாயகனுக்குப் பின்னே வந்த திருமலைநாயகன் துரைத்தனத்திலேயே என்று சொல்லப்படுகின்றது.

இந்தக் கடைசித் துரையாகிய வீரப்பநாயகனுக்குக் குமாரனும், பின் வந்தவனுமாகிய திருமலைநாயகன் அரசுக்கு வந்த காலத்தைக்கொண்டு ஒரு நிச்சயமான சரித்திரகாலத்தை நாம் நிரூபிக்கலாம். மேலும் அது நடந்தது ௲௬௱௨௰௩ம் வருஷமும், ௲௬௱௨௰௪ம் வருஷமும், ௲௬௱௨௰௫ம் வருஷமுமாகிய அந்தக் காலத்திலே இரண்டு மூன்று வருஷத்துக்குள்ளேதானென்று பல சாதனங்கள் சொல்லுகின்றது. இந்த நாயகனுடைய துரைத்தனம் நீடித்தும் பிரபலித்துமிருந்தது. இவனுடைய அரசிலே கட்டின அரமனைக்கட்டிடங்கள், அவனுடைய சமயத்துக்குஞ் சிறப்புகளும் இன்னமுஞ் சிறந்த அடையாளங்களாயிருக்கின்றன.

இந்தத் துரைத்தனத்திலே இராமநாதபுரத்துக் காரியங்கள் நானாவிதமும் முக்கியமானவைகளாயிருக்கின்றன. ஆனவகையென்னவென்றால், உடையான்தேவனுடைய குமாரனும், அவனுக்குப் பின்னே பட்டத்துக்கு வந்தவனுமாகிய கூத்தன் சேதுபதியென்றவன் தன் மரணகாலத்திலே நாலு குலஸ்திரீ குமாரர்களையும், ஒரு வைப்பாட்டிப் பிள்ளையையும் வைத்திறந்துபோனான். இவர்களில் முதலிற் சொன்ன நாலு குமாரர்களில் மூன்றாம் பேரையுடையவன் தன் தகப்பன் பட்டத்துக்கு வந்தான். ஆனாலும் நாலாம்பேரையுடைய ஆதிநாராயணனென்றவன் அந்த ராச்சியம் தனக்கேயுடையதென்று சச்சரவுப்பட்டு ஒரு பெரிய ரணரங்கசூரனான தன் மருமகனான திருவுடையானென்றவனின் சகாயத்தைக்கொண்டு தன் சகோதரனைத் தள்ளிவிட்டுத் தானே ராமநாதபுரத்தினது அரசாட்சியைக் கட்டிக்கொண்டான். அப்புறங் கூத்தன்சேதுபதியின் வைப்பாட்டிப் பிள்ளையாகிய தம்பியென்றவன் மதுரைச் சமஸ்தானத்தைப் போயடுத்தான். அப்போது திருமலைநாயகன் கழுவிலே அவனுக்குடந்தையாகித் தன் சேனாபதியாகிய ராமய்யனைக் கூப்பிட்டு இவன் சொல்லுகிறபடி மறவதேசத்திலே ஒரு பாகமாகிய இவன் காணியாட்சியை இவன் வசம்பண்ணக்கடவாயென்று சொல்லி ஒரு தண்டும் அவனோடேகூட்டி அவனை அனுப்பினான். அந்த மதுரை ராணுவங்கள் அப்படியே திருவுடையான் வியூகமிட்டிருந்தபோது செயகரமாய் எதிர்த்துக்கொண்டான். ஆனாலும் அவன் அம்மைவார்த்துக்குளிரக்கொண்டுபோகையில் அவனுடைய சத்துருக்கள் குளியமலைத்ததனாலே இறந்துபோனானென்று சொல்லிக்கொண்டார்கள். அப்போது ராமய்யன் அந்த ராச்சியத்தைக் கவிழ்த்துக்கொண்டு ஆதிநாராயணனைப் பிடித்து மதுரைக்குக் கொண்டுபோக அங்கே அவன் மகா கடினமான காவலிலே வைக்கப்பட்டான்.

அப்புறம் தம்பி சேதுபதி இராமநாதபுரத்துக்கு தனியரசனாய் விட்டான். ஆனாலும் அந்தப் பிரஜைகள் அவனுடைய ஜனனமத்தைக் குறித்துத் தூஷித்து அவன் கட்டளைகளுக்கு இசைபடியாமல் மீறிப் புய்யங்களாய்க் கலகம்பண்ணத் தொடங்கினபடியினாலே இப்படியும் அவன் தனக்கு ஆதாரமாகிய மதுரைச் சமஸ்தானத்தில் [illegible] புகுந்தான். இந்தக் கெடுக்குந் தேசத்துக்கு அப்போது யாதொரு அதிகாரியுமில்லாமையால் இராமேசுரத்துக்கு யாத்திரைபோகிறவர்களுக்குப் பழையபடி அபாயங்கள் பின்னும் நேரிட்டு யாத்திரை தடங்கலாயிற்று. அதினாலே பிராமணர்களும் சந்நியாசிகளும் திருமலைநாயகனண்டை போய் அந்த மறவதேசத்திலே யாத்திரைவாசிகளுக்கு அபாயம் வரவொட்டாமற் காப்பாற்றும்படிக்கு ஆதிநாராயணனுக்கு அந்தத் துரைத்தனத்தை மறுபடியுங்கொடுக்கும்படியாய் வேண்டிக்கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

---

## Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்

### ௰௮. அதிகாரம்.

*Mohammed alleges a breach of faith on the part of the Meccans, and marches an army against them—The city ceded to the conqueror—Abu Sophyan, and Al Abbas the prophet's uncle, declare themselves converts—Mecca declared to be Holy ground—The neighboring tribes collect an army of four thousand men to arrest the growing power of the prophet—The confederates entirely overthrown—A rival prophet arises in the person of Moseilama—Is crushed by Calad*

மகமதுநபி மக்கத்துக்காரர்களுக்கவேண்டுமென்ற துணிவுகொண்டு மக்கநகரியார் தன்னுடனே முன்னொருமுறையிற் பத்துவருடத்துக்குப் பொருத்தனைபண்ணியும் அதில் இரண்டு வருடஞ் செல்லுகிறது செல்லமுன்னமே அவர்கள் பண்ணிவைத்த பொருத்தனையை மீறிப்போட்டார்களென்று மாரிசம்பண்ணி அதற்காக அவர்களைக் குற்றமுஞ் சாட்டித் தனது ரணரங்க வீரர்களிற் (௰௲) பேரையுஞ் சேர்த்துக்கொண்டு மக்கத்துக்கு விரோதமாகப் போய்க் கோறிஸ்வங்கிஷத்தனுசாரிகளை ஏயத்தனுபவித் தமது மதத்தைத் தழுவும்படியாக்கி மக்கத்தார் யுத்தத்துக்கு எத்தனம்பண்ணமுன் [illegible] வீழ்ந்து [illegible] ரங்களுக்கரையாவதிலும் பட்டணத்தை முஸ்லீமர்களுக்கொப்படைபண்ணுவதே அதிக நலமென்றுன்னி, வெகுகாலமாக மகமதுநபிக்கும் அவர் கட்டிய மதத்துக்கும் உடன்படாமல் நின்ற அபுசோபியன் என்பவனும் ஏய்த்தவனென்று மறுநாமமுள்ள மகமதுவின் சிற்றப்பனாகிய அல அப்பாஸ் (Al Abbas) என்பவனும் மகமதுமுன் சென்று பட்டணத்தின் திறவுகோலை நபிகையிற் கொடுத்து இருவருஞ் சாட்டாங்கமாய் முகங்குப்புறவிழுந்து நீர் மாத்திரமே பராபரனாலனுப்பப்பட்ட அப்போஸ்தலனென்றதாக அறிக்கையிட்டார்கள். மகமது யுத்தவித்தையில் மிகவல்லவராயிருந்ததும் மெத்தக்கொடியவராயிருந்தாரென்றதாகக் காணவில்லை. அவர் பிரதானமாய்ச் சனங்களிற சினங்கொள்ளுவதிலுஞ் சனங்கள் அனுசரித்துவரும் விக்கிரகங்களிலே அவர் மிகவும் முனிவுகொண்டவராயுமிருந்தார்.

கோறிஸ்வருணத்தவர்களில் முதலாளிமார் நபிக்குமுன் விழுந்து தங்களிலும் இரக்கம்புரியவேணுமென்று முறையிட்டபொழுது நபிகொடுத்த உத்தரம் வது, "நீங்கள் குற்றஞ்செய்த மனிதனிடத்தில் இருந்து என்னென்றுபாக்கட்சத்தைப் பெறவிருக்கிறீர்கள். நல்லது நடவுங்கள், நீங்கள் இஷ்டராயிருக்கிறபடியால் யாதொருவனும் உங்களுக்குக் கேடுசெய்யமாட்டான்" நபியானவர் இவ்விதமாயுரைத்த பிறகு அவர்கள் யாதொரு தொந்தரவுமில்லாமல் உயர்ந்த உத்தியோகங்களில் வைக்கப்பட்டார்கள்.

மகமதுநபி மக்கநகரிக்குட்பட்டவேளையில், (௬) ஆட்களையும், (௨) திரீகளையுஞ் சங்காரம்பண்ணுவித்துப் பிறகு கேயாபா (Caaba) என்ற கோவிலைச் சுத்தம்பண்ணி அதிலிருந்த (௩௱௬௰) விக்கிரகங்களையும் வெளியே எடுப்பித்து, அக்கோவிலைத் தமது மதத்தினுமத்துக்கென்று பிரதிஷ்டைபண்ணவும், அவ்விவாசிகளெல்லோரும் கோவிலுக்குட் காலமிதிக்கப்படாதென்றுந் தான் விதித்த கட்டளைச்சட்டத்தின்படி சகலருந் தொழவேண்டுமென்றும் பெருகுறுதிவித்தார். அக்காலந்தொடுத்து இக்காலம் வரைக்கும் அவர் நிருமித்த பிரமாணப்படியே மகமதுமதானுசாரிகள் தொழுதுவருகிறார்கள்.

மகமதுநபி மக்கத்தைச் செயங்கொண்டசெய்தி அரபிக்கத்

தேயங்களைக் கெட்டினபொழுது, காவாசின்ஸ் (Hawazins) தக்கிபின்ஸ் (Takifians) முதலான மற்றுங் குலத்தவர்கள் அதிக சீக்கிரமாக ஏறக்குறைய (௨௰) பேரைக்கூட்டி மகமதுவின் சத்தைக் கெடுக்கும்படி முயன்றவேளையில், மகமது தானே வருமளவுந் தன்னிடத்துக்கிருந்து ராசாளும்படி வேறொருவனை நியமித்துவிட்டு (௰௨௲) சனத்தையுஞ் சேர்த்துக் கோனீன் (Honein) என்ற பள்ளத்தாக்கில் யுத்தம் நடப்பித்தபொழுது நபிபக்கத்தார் முதுகுகாட்டித் தோற்றோட, அவர்களிற் சிலர் மக்கநகரியின் மதிலுக்குட் பதுங்கிவிட்டார்கள் அப்பொழுது நபி ஒருவெள்ளைக் கழுதையிலேறித் தன தாட்களிற் சிலரையுங்கூட்டி அவர்களுடைய ஒத்தாசையினால் மகமது சொன்னது, "ஆ! என் சகோதரர்களே! நானே அப்டல்லா என்பவரின் புத்திரன் நானே சத்திய அப்போஸ்தலன் ஆ பரனே! உமதொத்தாசையை அனுப்பும்" உடனே மகமதுவின் சிற்றப்பனாகிய அப்பாஸ் என்றவன் தன் சத்தமெட்டக்கூடியளவு ஓலமிட்டுப் பின்னிட்டு முன்முறிந்தோடின தன்தாட்களைத் திரும்பவுஞ் சேர்த்துயுத்தம்பண்ணிக் கடைசியாய் மகமதுசனமே சகல சத்துராதிகளையுங் கெலித்துத் துரத்தினார்கள்

பிறகு நபியானவர் விக்கிரகாராதனைக் கோவில்களையும் இடித்தழிக்கும்படி சேயட் (Saad) காலட் (Caled) முதலான மார்க்காறுயுத்தசாலிகளைத் தான் சயங்கொண்ட சகல தேயங்களுக்கும் அனுப்பினபொழுது அவர்கள் போய் அநேகரை மதத்துக்குட்படுத்தினார்கள்

மகமது அரபிக்கரசனானபடியினாலே, கெசிராவின் ஒன்பதாம் வருடத்திலே சீரியாதேயத்தைச் செவிக்கிறதற்குத் தேசித்தானும், அவ்யுத்தம் இவரிருந்த காலவரையில் முடியாமற்போயிவருக்குப் பிரதியாய் வந்தவர்கள் தானே யுத்தத்தை முடித்தார்களென்று காணப்படுகின்றது அப்படியிருந்தும் அவர் தாமே அகோரமான கோடைகாலத்தில் யுத்தம் நடப்பித்தபடியால் அவ்விடத்தில் தண்ணீர்குறைவினாலுண்டுபடுங் கானலினாலே மிகவருந்திக் கடைசியாய்த் தவக (Tabuc) என்ற கிராமத்தைத் தங்கள் வசமாக்கிக்கொண்டு, பிறகு அதற்கயலிலிருக்கிற தோமே (Dauma) ஐலா (Eyla) என்ற நாடுகளையும் வெற்றிகொண்டு அவ்வூரசர்களைத் திறைகொடுக்கும்படிபண்ணினார்

மகமது சீத்தியுந் தத்துவசவுக்கியமுமெங்குந் தொடர்ந்து நெருங்கிப் பிரபலியப்பட்டபடியால் தூரதேசவாசம்பண்ணின வேறு வருணத்தவர்களும் பட்டு நடுங்கிக் கலங்கி நாங்கள் அத்தியம்பண்ணுவதற்குத் தக்கவர் நீர்தானே, (மகமது) என்று சொல்லித் தங்கடங்கள் தானாபதிகளை மகமதுவிடத்துக்கனுப்பிவைத்தார்கள் இவர்களைவிட வேறுமற்பல வருணத்தவர்களும் மகமதுவிடத்துக்குத் தானாபத்தியங்களை அனுப்பினபடியால், இந்த வருடத்தை நபியானவர் "தானாபத்திய வருடம்" எனச்சொல்லிக்கொண்டார் இன்னும் இந்த வருடத்திலேதானே மகமது மக்கத்துக்கு (௪௰௲) சனங்களுடன் கடைசியாய் யாத்திரைபண்ணினபடியினாலே அதைக் "கடைசி யாத்திரை" எனவுஞ் சொல்லிக்கொண்டார்

மகமது வரவரத் தத்துவத்திலும் ஆளணியிலும் மெத்தக் கனங்கொண்டவரானதினாலே அவருக்கு விரோதியானவர்களில்லாரென்னிலும் அவருடன் யுத்தம்பண்ணி அவரை முறியடிக்கத் தகுதியுள்ளவர்களாயிருக்கவில்லை மகமது தாமே பரனிடத்திருந்து வந்த அப்போஸ்தலனென்றும், நபியென்றுஞ் சொல்லிக்கொண்டதைப் பிடித்தும், அவர் போனபோனவிடங்களில் அடைந்த செயானுகூலத்தைத் தொட்டும் வேறுசிலர் தாங்களும் அவ்வளவு மகிமையுங் கனமுமுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ள ஏதுவாய்வந்தது அப்படியே "பொய்வேஷங்கொண்ட முஸலீமா" என்று இஸலாமதத்தவர்களுக்குள் இக்காலத்திலுங் குறித்துப் பேசப்படுபவனாகிய முஸைலீமா (Moseilama) என்பவன் ஒருவன் ஒருமுறை மகமதுவிடத்துக்கொரு தானாபத்தியத்தை அனுப்பிவைத்துத் தானும் பிறகு போய் மகமதுவுக்கு ஸலாமதத்தை அநுசரிக்கிறவனென்று சொல்லிப் பிறகு அடுத்த வருடத்திலே தன்னெண்ணத்தைப் பிரசித்தப்படுத்த விரும்பினான் எப்படியெனில், விக்கிரகாராதனையை விட்டுச் சத்தியபரனை வணங்கும்படி மனிதரை அழைக்கிறதற்குத் தானும் மகமதுவுடன்கூடப் பரனாலனுப்பப்பட்ட நபியென்றும், கொறானுக்கொத்ததைப்போலொத்த வேறொரு ஆகமத்தை வானத்திலிருந்து அவர் பெற்றுக்கொண்டானென்றுங் கூறிக் கோனீபா (Koneifa) என்னும் வருணத்தவர்களிற் சிலரை அணைத்துக்கொண்டு பிறகு, "மகமது நபிக்குத் தானுஞ் சரிவந்தவனென்று சொல்லவும், நபி யுத்தியோகத்திலே தனக்கும் பங்கென்றுரைக்கவும் ஆரம்பித்து மகமதுநபிக்கெழுதின காகித வாசகமாவது, "பராபரனுடைய அப்போஸ்தலனாகிய முஸலீமா, பராபரனுடைய அப்போஸ்தலனாகிய மகமதுவுக்கெழுதுகிறதென்னவென்றால், இராச்சியத்தில் அரைவாசியெனக்கும் அரைவாசி உமக்குமுடையது" இதற்குத்தரமாக நபி எழுதுகிறதாவது, "பராபரனுடைய அப்போஸ்தலனாகிய மகமது, பொய்யுங் கபடமும் வஞ்சனையும் நிறைந்த முஸலீமாவுக்கெழுதுகிறதென்னவெனில், இராச்சியம் பராபரனுக்குடையது அவர் தமக்குப் பிரியமான பத்தர்களுக்கிராச்சியத்தைச் சுதந்தரமாகக்கொடுப்பார் அவருக்கஞ்சுகிறவர்களுக்குச் சந்தோஷசவுக்கியமுண்டாகும்"

கொஞ்சகாலத்திற் பிறகு மகமது சுறமே துன்பமாயிருந்தபடியால் முஸலீமா என்பவன் அவருக்குப் பற்பல கலகங்களையுண்டுபண்ணினவேளையில், "பராபரனுடைய பட்டயம்" என்று மறுநாமமுள்ள காலட் என்ற வீரன் இந்த முஸலீமாவென்ற பொய்யனையும் அவனைச் சார்ந்த சனத்தையும் அடக்கிக் கீழ்ப்படுத்தும்படி படையெடுத்துப்போய் முஸலீமா என்றவனையும் அவனைச் சார்ந்த (௰௲) ஆட்களையும் போரிலே சங்காரம்பண்ணிப்போட்டவேளையில், அவர்களில் மிச்சப்பேர் தாங்கள் முன்பற்றின வீண்கோட்பாட்டை விட்டுத் திரும்பி மகமதுசபையிற் சேர்ந்துவிட்டார்கள். இந்த முஸலீமாவைத்தவிர வேறுமநேகர் எழும்பி மகமதுவைப்போலிருக்க விரும்பினதினால் அவர்களெல்லாரும் மட்டங்கடிக்கப்பட்டார்களெனக் காணகிறது

---

## கூட்டென்பவர் செய்த பிரபஞ்சநூல்

### [ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE ]

௨ம் பிரிவு—௪ அதிகாரம

சிற்றறிவு

௧. மனுஷசாதியாருக்குக் காணகின்ற வெவ்வேறான தொழில்களுண்டு, ஆகிலும் அதிகமாக மிருகசாதிகளுக்குள்ளபடியாயவை அந்தந்த வழிவகையிலே அந்தந்தக் கருமத்தை நடப்பிக்கக்கூடியதாய அதுவும் அக்காரியத்தைப்பற்றியாதொரு யோசனையின்றியே நடக்கின்றன இவைகள் தேனவதையறைகளை எப்போதும் ஒரேகுறிக்கத்தவிதமாய வைக்கின்றன. பொட்டுப்பூச்சியும் ஈயப்பிடிப்பதற்குத் தான் மாதங்கள் வருடங்கள் சென்றதின்பின் நாலாயிரத்து போலப் பூரணமாயத் துவக்கத்திலும் நாறகிறது

௨. யோசனையின்றிச் சுபாபம்போதிக்கின்றபடி செய்வதே மிருகவறிவு. இவ்வகையந்தக்கரணம் மகாவதசெயமானது இதினாலுண்டாகுங் காரியங்களைவையென நாமாராய்ந்து பிடிக்கக்கூடியதாயிருந்தும் அது தொழிற்படும்விதம் நமக்குவிளங்காது முதற்பிரிவின் பத்தாம் அதிகாரத்திலே சீவநிலையைப் பற்றிப் பார்த்தது உங்களுக்கு நினைவாயிருக்கும். இத்தினைவு தொழிற்படுவது மிருகவறிவினாலாகும்

௩. சீவனுள்ளவெதுவும் மிருகவறிவின் பிரமாணங்களுக்குள்ளமையும் விலங்குசாதியைப்போல் விருக்கசாதியும் உள்ளான உயர்த்தியினாலொழுங்குபடுத்தப்படும் சீவநிலைசீவசடத்தினது சுகத்துக்குள் காப்புக்கும் பலுகுதலுக்கும் அல்லது அப்படிப்பட்ட சீவசடத்தினது யாதொரு பகுதிக்கும் தனது தொழில்களைத் தெளிவாய்ச் செலுத்துவது மிருகவறிவினாலாகும்

௪. இந்த மிருகவறிவு மிருகங்களிலுஞ் சிலவேளை பூண்டுகளிலும் பேரறிவைப்போலக் காணப்படுகிறது. இலுதராகரியென்னுஞ்செடியினது வேரை ஒரு புறம்பான மணலிலே வைத்தால் அதின் பக்கவேர்களெல்லாம் பயனிலங்கிட்டவிருக்கிறதிக்காகவேண்டுமே.

௫. சுவரிலே ஒரு கொட்டையிலிருந்துண்டாகிற மரம் கொஞ்சளவுக்கு வளர்ந்து பிறகு நிலத்துக்கொரு வேர்விட்டு அது பயனிக்கொண்டவிடத்திலும் பட்டபின் மறுபடியும் வளரக்கண்டிருக்கின்றது

௬. மிருகசாதிகளுக்குமிச்சிற்றறிவு அதிக பூரணமாயுண்டு ஒருகுழவி தனக்கேற்றுகூடிய மற்றக் குழவி செத்தாலதைக் கூட்டைவிட்டுப் புறம்பே கொண்டுபோக [illegible] பாரமாகில் அதின் தலையை வெட்டி இரண்டு துண்டாக்கிக் கொண்டுபோகின்றது அப்படியே பட்சிகளும் தங்கள் கூடுகட்டுகிறதற்கெப்பொழுதும

ஒரேசாமான் தேடுகின்றன அது கிடையாத காலங்களில அதற்குச்கூடிய நலமான பிறசாமானைத் தேடுகிறது பொற்சிறகையெனனுங் குருவி முட்பூஞ்செடுத்துத் தனது கூட்டை அடைக்கிறது, அது கிடையாவிட்டால மயிரலலது இறகை விட்டுப் பருத்திப் பஞ்சு அல்லது ஆட்டுமயிர தேடுகின்றது

எ. பேரறிவுக்குஞ் சிற்றறிவு வித்தியாசப்படுவதேதெனில், பேரறிவுக்குப் படிப்புவேண்டியதாயிருந்து அப்பியாசத்திற்றேறுதலடைந்து கொஞ்சக்கொஞ்சமாய அறிவில முதிருகின்றது. ஆனாலும சிற்றறிவுதோற்றத்திலேயே முதிர்ந்ததாய் மனுஷன எவவளவு பூரணமோ அவவளவு குழந்தையிலுமுணடு ஒவவொரு மிருககுட்டியும தான வளர்ந்த பிறகு எவவளவு பூரணமோ அவவளவு பிறந்தபோல் தனனுயிரைக் காககத்தக்க தேவையான சனத்தைத் தேடுகிற சுபாவ சிற்றறிவைக் காட்டுகின்றது

அ சுபாவத்தினாலே மிருகங்கள் ஏற்பட்டிருக்கும் மற்றுஞ் செய்கைகளும படிப்பினையின்றித் தமது தத்துவத்தைக காட்டுகின்றன. கோழியாற்பொரிக்கபபட்ட தாராக்குஞ்சுகள் தண்ணீரில அமிழந்தி நீநதித் ததிச் சந்தோஷபபடக் கைத்தாயாகிய கோழிகணடு பயந்து திடுக்கிட்டு நின்று விருதாவிற் கொக்கரித்து வரச்சொலலி உறுக்கிப்பார்க்கும கோழி எணணிக்கையுடனே தணணீரில இறஙகாமல விலகி நிற்கத் தாராககுஞ்சுகளுககதில மோசமிலலையென்றெபபடித்தெரியும. அது பராபரனவைகளினுள்ளத்தில முத்திரித்த சிற்றறிவினியககம

கூ ஆகையால சிற்றறிவாவது சீவாங்கபடைப்புக்கப்பொழுது அலலது பினனுலாகவேண்டிய பயனுக்கியறறப்பட்ட சில சுபாவதத்துவஙகளின் சேட்டையிலுலாகும அதின் தொழிலாம. பேரறிவாவதுமனமுள்ள சீவனுககம முகாந்திரத்துக்காக ஏற்படுததப்படடதாயக கற்றறிந்த தத்துவஙகளின சேட்டையிலுணடாகும அதின்றொழிலாம் இரணடும, முகாந்திரத்துககூடியதாயத்தஙதன விதத்திற் பூரணப்படடதாயச சிடிகருடையஞானதைச சரியாயக் காட்டுகின்றது.

---

(The following article is the original of the foregoing )

## ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

PART II.] *On Instinct.* [CHAP. 4.

1. THERE are various actions to be met with among mankind, but more frequently among other animals, which show that there has been a particular end obtained by particular means, and that, too, without any reasoning about the matter The bee makes her cells for honey always in a particular way, and the spider spins her web to catch flies just as perfectly at first as after she has spun for months and years

2 This mode of acting as nature directs, without reasoning, is called *instinct*. This faculty is a very wonderful one, and we cannot understand how it operates, though we can trace its effects You recollect, in the tenth chapter of the first part, the *principle* of *life* was considered, now the manner in which this principle operates is by instinct.

3. Whatever has life is subjected to the laws of instinct, plants as well as animals are regulated by this internal monitor. Whenever the living principle manifestly directs its operations to the health, the preservation, or the reproduction of a living frame, or any part of such a frame, the process, is carried on by instinct.

4 This instinct often appears like reason in animals, and sometimes in plants Place a strawberry root in a patch of sand, and it will send forth almost all its runners in the direction in which the proper soil lies nearest.

5 When a tree happens to grow from a seed on a wall, it has been observed, on arriving at a certain size, to stop for a while, and send down a root to the ground, as soon as this root was established in the soil, the tree began again to grow

6. Animals show the same kind of instinct, but in greater perfection When a wasp attempts to carry a dead companion from the nest, and finds it too heavy, he cuts off its head and carries it out in two portions So birds in building their nests, naturally use one kind of materials, but if this cannot be procured, they find the best substitute possible The goldfinch prefers thistle down for the lining of its nest, but when it cannot procure this, it takes cotton wool or even sheep's wool, before it will use hair or feathers.

7 Instinct differs from reason in this point—reason requires to be instructed, it improves by experience, and gains maturity by slow degrees But instinct is mature at first, it is as perfect in the infant as the man Every kind of young animals shows that instinct of its nature, namely, to seek its food, which is necessary to preserve life, as completely at its birth as it ever does afterwards

8 So also other habits, for which nature has fitted animals, show their power without any teaching a brood of young ducks, hatched under a hen, will plunge into the water and swim and flutter happy enough, while the poor frightened foster-mother stands amazed at the sight, and clucks, calls and scolds to no purpose How do the young ducks know that the water is safe for them when the hen avoids it so carefully? It is the impulse of instinct, which God has stamped in the interior of their little frames

9 Instinct, then, is the operation of the principle of organized life by the exercise of certain natural powers directed to the present or future good of the individual, and reason is the operation of the principle of intellectual life, by the exercise of certain acquired powers directed to the same end. Both equally answer their object, are equally perfect in their kind, and equally display the wisdom of the Creator.

---

TWO EPIGRAMS OF SIR WILLIAM JONES —Sir William Jones' pen was most honorably pure, even when it was merely playful or elegant, often it was directly moral, and sometimes it was devotional Two of his epigrams occur to us while writing Sir Edward Coke's couplet is well known

> "Six hours in sleep, in law's grave study six,
> Four spent in prayer, the rest on nature fix "

Rather said Sir William Jones,

> Six hours to law, to soothing slumber seven,
> Ten to the world allot, and all to Heaven "

Sir William's calculation gives one hour directly every day to prayer, instead of four which we imagine is more than most busy lawyers afford, so that he could not mean to detract from the duty of direct acts of devotion, while he inculcated the truly evangelical doctrine, that whether we eat or drink, or whatever we do, we should do all to the glory of God

The second specimen is his translation of a thought of Hafez, which, according to our minds, forms one of the very happiest epigrams in the English language, scarcely excepting Dr Doddridge's "Live while you live "

> "On parent's knees, a naked new-born child,
> Weeping thou satt'st, while all around thee smil'd
> So live, that sinking in thy last long sleep,
> Calm thou may'st smile, when all around thee weep "

# கடிதங்கள்.

## இலக்கணக் களஞ்சியம்

(On Tamil Grammar.)

மகா கனம்பொருந்திய மைனர்த்துரையவர்களுக்கு வந்தனம் பத்திராதிபதிகளாகிய பிரபுக்களுக்குப் பதினாறு பேறுமவகுக.

(குவலயாநந்தம் உறுப்பியல்)

இலக்கணம்வந்தவைக்கிலக்கியமிலவயென, விலக்கியம் வந்தவைக்கிலக்கணமிவையென,வெடுத்துக்காட்டுதலுதாரணச்சொல்லே.- இலக்கணக்கருத்தேயிலக்கியமறிநெறி — இலக்கியமெனபதிலக்கணத்தியைபு, தக்கெதியுரைக்கியவைத்தென்க —பொருளென நல்லோர் புகல்வது கருத்தே.—கருத்தெனப்பெறுவதைத் தொகைவகைவிரியாற், சொல்லிய பயனைத் தோற்றுவதேபொருள் பொதுமொழிபிணையடையெனவே கருத்தைப, புகலப்பெறுவது தொகையெனவறையும்.—கருத்தின விரிவைக் கற்றோர்ககினிதாய், வகுத்துக்காட்டல வகையெனவறையும் —இலக்கிய வழக்கொடனேகருத்தின், விதப்பினுரைப்பது விரிவாகும்மே. "அகத்தியம" இலக்கணமெனபதிலக்கியமுறையுற வைத்ததென்று வழங்கப்படுமே.— இலக்கியமென்பதிலக்கணச்சான்றாய், வழங்கியவ்விலக்கணமலகிய தாமே.— இலக்கியமின்றியிலக்கணமின்றே, யெள்ளின்றிலெண்ணெயுமின்றே, யெள்ளினின்றெண்ணெயெடுப்பதுபோல, விலக்கியத்தினின்றெடுபடுமிலக்கணம் "சிற்றகத்தியம" பூவினுள் வாசமபொருந்துதலபோல, விலக்கணவிலக்கியமியைபுடைத்தாகும்.

(குவலயாநந்தம் சித்திரவியல்.)

விதரணசௌரியமெனுமவினைமொழியாற்,பொய்த்தோற்றம்பெறக்கூறிடினதனை,மிஞ்சுகருவென விளம்பினா புலவர்.

உம்—மன்னன் வழுதிவருகுங்கொடைநோக்கி, யன்னதருவைக் துமதிதியாம - இதனுள் வழுதிகொடையைப பெருமைசெயது கற்பகத்தருவைச்சிறுமைசெயதுகருத்துநிற்றலால-மிஞ்சுகருவென்னுமணி.

பிரமாணம்பிரமேய்மையங்காரிய, நிதர்ச்சனஞ் சித்தாந்தம்வைதர்க்கநிருணய,மாயாசமவிதண்டைடிகலநிக்கிரகம்,வாதஞ் சிற்பஞ் சாதகமென் [illegible] தர்க்கருபொருளாமே.

இசசோடசபதார்த்தமாகிய வாதககருபபொருளைவாதியும் எதிர் வாதியுமறிந்துவாதஞ் செய்தலேதருக்கவிலக்கண விதியெனறவாறு.

(இறையனாரகப்பொருள்)

கற்பினுட்டுறவேகடிவரையின்றே. ஓதலுங்காவலும்யாங்தோர்க்குரிய.— வேந்துவினையியற்கைபார்ப்பார்க்குமுரித்தே — அரசரெயன் றியேனையோர்கரும்; புரைவதெனபவோரிடத்தான - காதற் பரத்தையெல்லார்க்கு முரித்தே —பரத்தையிறமபிரிவே நிலத்திரியின்றே.

(யாப்பருங்கலவிருத்தி)

வெள்ளைநிலம்பத்தகவலபதினேழு, துள்ளலிருநான்கு தூங்கலபத்—தென்னா, விருசீரடிமுச்சீரைந்தாறேழெண்சீ, ரொருவாநிலமைம்பத்தொன்று.

(பிரபந்ததீபம்.)

சொன்னவெழுத்தினுஞ்சொன்னமொழியினு, மக்கிலேதன்னிலிருவகைப்பொருட்கு, முன்னியகருத்துமுடிவுறப்பாடல சமுத்தியென்றுசாற்றுவாதுவே,கொடுத்தபொருளெலாங்குறைபாடினறித், தொடுத்தயாப்பிற்றுயத்துகளற்றிற்றலே

(செய்யுளியல்சூத்திரம்.)

கட்டுரைவகையாலெண்ணொடு புணர்ந்து, முற்றடியின்றிக்குறைச்சீர்த்தாகியு, மொழியசையாகியும வழியசைப்புணர்ந்துஞ், சொற்சீரடியுஞ் சொற்சீரடியலபே.

(மாபுராணவிலக்கணம்.)

அகத்திணையகவயினதிறப்புவஞ்சி, சிறப்பிலவென்னுஞ் சிலவிடத்துளவே,

(பூதபுராணவிலக்கணம்.)

அகப்பாவகவலினவஞ்சிக்குரியவடியிரண்டும்,புகப்பான்மையவல்லவென்பதொல்லோர்தன்புகரில்வஞ்சி,யகப்பாப்பொருளையாவென்பாவலர்க்குறிப், புகப்பான்மைடியுமொருசார்புலவரானா புகன்றனரே.

(சங்கயாப்புச் சூத்திரம்.)

காசுநன்குபிறப்புமலர்நாள்வெண்பாவீற்றினமேவுவாய்பாடே.

(இலக்கணத்திரட்டு)

தலைமாணுக்கன்றனக்கோதியபொருள், பொற்கலத்தமுதம்பெய்திருந்ததுபோலுமே இடைமாணுக்கற்கிந்திடுநற்பொருள், டேரோடு நீர்சடஞ்சோத்தற்றுமே கடைமாணுக்கன்காதுறப்புகலபொருள், கமரினுளாலபாலகவிழ்த்ததையொக்கும்

(இலக்கணக்கொத்து.)

பெயர்வினையிடையுரிநான்கடியாலும,பிறக்கும்வினையெனப் பேசினாபுலவர், பன்படிமுதலாப்பலவும்பகாவ, ரவையிவையுள்ளேயடங்குமென்க. உம்-கொடுபபதழுக்கறுப்பான. இதுபெயரடியாகப்பிறந்தவினை-நடந்தான்- இதுவினையடியாகப் பிறந்தவினை-புலிபோலநசாத்தன— இதுஇடையடியாகப்பிறந்தவினை-சிவந்தகண் -இது உரியடியாகப பிறநதவினை—பிறவுமனன

(இலக்கணவிளக்கம்.)

அச்சம்பயமிவிகாலமபெருமையென, றப்பாறுள்கேகொளலுச் சொலலே

(அரியவிதிபோதுவியல்.)

பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலவினை, யிடையுரியொனபதுமேற்குமடுககே

உம்-பணம்பணமெனறுவருகிறன்-பொருள்-மனைமனையென்றழுகிறன-இடம- வெயிலவெயிலபோகாதே-காலம- கைகையத்திரம-வினை-தருமசாவிதருமசாவி-குணம-பாடுவானபாடுவான -தொழில-வந்தான வந்தான-வினை-சரிசரியெனகிறன- இடை-இவசிவுந்த கண-உரி-முறையேயொன்பதடுக்குச் சொற்களுககாண்க.

(தோன்னூல்விளக்கம்.)

மங்கலப்பொருத்தமேகவகைமலைநிலங், கார்புயல்பொன்மணி கடலசொலகரிபரி, சீரபுகழெழுத்தலர்திங்கடினகரன, றேர்வயலமிழதந்திருவுலகாரண, நீரபிறவருமுதனிலைச்சொலவியல்பே

சொலவினபொருத்தஞ்சொலலுங்காலை, யரிதுணாசொலலும மருந்திரிசொலலுந், திரிபுடைச்சிருநதிதாமுதற்கே

எழுத்தினபொருத்தமெழுவாய்ச்சீரக்கணூன்,றைக்தேழொன [illegible],

முனபத்திரிகையிலவேறிலககணசசாடசிகாடடுதும என்றதினி வருமபத்திரிகையிற் காணலாம்.

பத்திராதிபதிகளுக்குத் தோத்திரம்

---

## Hinduism Unmasked.

(Continued from page 204 )

### OUTLINES OF HINDU GEOGRAPHY.

*Scanda Purana—Andakosa Section.*

O King! armed with the leaf-like dart, listen attentively The Andas such as the Earth which sprung from the five elements are in number 100,000,000; of which you have 1,008. The nature of one of these I will describe so that you may perceive it as clearly as you can look through a most transparent Nelly-fruit The length and breadth of the Andas are equal, each being 1,000,000,000 yojanas.

To the Earth there are 7 insular Continents or Islands, *Jambu*, *Shaka*, *Kusha*, *Kirouncha*, *Ilava*, *Komathaga*, *and Pushkara* Around Jambu Island is a sea of salt-water, around Shaka a sea of milk, around Kusha, a sea of curds, around Kirouncha, a sea of curds; around Ilava, a sea of sugar-cane-juice; around Komathaga is a sea of honey; and around Pushkara is a sea of fresh water. All are in a circular form.

The first Island *Jambu* is 100,000 yojanas, and the sea that surrounds it is of the same breadth; the next is double, and so on, in all they are 25,400,000

*A greater lie is not set forth even in Scanda Purana*, is an expressive proverb, so current among the Hindus, that when they question the truth of a statement, they make a very lib-

eral use of it in the form of an exclamation expressing denial. The Hindus are not, it seems, totally lost to all reason and judgment. They have at least sense enough to view the said *Purana* as a stock of lies and to found upon it the truth of the proverb referred to Such is the miserable character of the Hindu mythology from which the above extract is made The Hindus however hold it in undiminished veneration and attach great merit and final beatitude to the reading and hearing of it in their temples. Such is the nature, propensity, and principle of the Hindus that one who should inquire into their system would be likely to suppose that they would have any thing but God for an object of worship, and receive any thing but truth for an article of faith.

But to return to our subject: the outline of geography found in this and other Puranas is diametrically opposed to the correct principles of true science and philosophy Those who have the slightest knowledge of the true geography will admit that the above statements misrepresent the form, magnitude, and the divisions of the Earth The Earth has been, and now is, thousands of times circumnavigated, and all its continents, islands, seas, &c thoroughly explored, and the one unanimous voice of all researches and investigations has fully established, beyond all possible doubt, that the Earth is a vast globe moving in the infinite expanse of space Thousands of ships float day and night upon its wide-spread waters, and proclaim the earth is round They visit the different parts of the earth from north to south, from east to west, from one direction to another, but have never witnessed the existence of the 7 concentric islands and seas, and consequently they are unknown to the most extensive voyagers and travellers who whirl round the earth If they are not on the earth, where are they? Again, the dimensions of the world are exaggerated to a degree, which shows that the framers of the *Puranas* erred most eggregiously in their mathematical accounts. The young Hindus who have had the benefit of European education, as I have, know to a perfect demonstration that the European science is true I appeal to them to judge between me and the Hindus It is the avowed principle of some of the Hindu astronomical treatises, such as Pulasthiya-Siddhanta, Brahma-Siddhanta, Arya-Siddhanta of Arya-Bhatta, Surya-Siddhanta, Siddhanta-Siromany of Baskar-Acharrya, &c that the Earth is spherical, and militates against this fabulous Puranic view

**Now then I challenge the learned defenders of the seven Islands and seas to come forward and prove their existence Where are they? Is this a piece of God's revelation? Does He reveal things that have no existence? Is this pack of sheer lies worthy of God's high character and glory? It would have been better had the author of these lies employed himself in studying the alphabet of moral rectitude rather than shamelessly to lavish all his genius in inventing these nonsensical fooleries and then by gross wickedness to palm them upon the credulity of his poor deluded brethren.**

**This is the pride and glory of Hinduism Will a rational being in the exercise of a particle of common sense give credit to a system fraught with such lies, and yet impudently claiming divine origin and demanding implicit belief and entire acceptance from men under false promises of an infinite bliss and a glorious immortality Let God enlighten the minds of our benighted fellow-countrymen, and reclaim them from the depths of delusion, degradation, and superstition, in which they are lamentably sunk, to the saving knowledge of Jesus Christ and him crucified.**

**More of this hereafter.**

***Batticotta Seminary 6th Sept.* 1842.** **ROBERT ADAIR.**

## இந்துமத வேடக்குலைவு

[Translation of the above ]

(கந்தப்புராணம்—அண்டகோசப்படலம் )

"சுவாமி! பரமேசுரனைக்குறித்த ஆயிரத்தெட்டண்டங்களினிலைமையைச்சொல்லவேண்டுமென்று கேட்டமாத்திரத்திலே சுக்கிரபகவான் சொல்லுவான

இலைத்தொழிலபொருந்திய வேலினையுடைய இராசாவே கேள்! பஞ்சபூதியங்களிற் றோன்றிய விந்தப் பிருதுவியண்டத்துக்கோ ஆயிரகோடியண்டமுண்டு. இப்படியான வாயிரகோடிகளிலும நீ பெற்றிருக்கிறாய் ஆயிரத்தெட்டண்டம். அந்த வாயிரத்தெட்டண்டத்துள்ளும ஒன்றினுடைய நிலைமையை நான சொல்லுகிறேன். நீயுள்ளங்கை நெல்லியபழமபோற் கண்டுகொள்

